**செ. கு. எண்**: 318 **நாள்**: 03.09.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 3.9.2012

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரம் காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சாந்தராஜ் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 31.8.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், பூந்தமல்லி போக்குவரத்து புலனாய்வு பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. M. பன்னீர்செல்வம் அவர்கள் 1.9.2012 அன்று மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி காலமானார் என்ற செய்தியையும்;

கீழ்பாக்கம் மருத்துவக் கல்லூரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. T. சுகுமாரன் அவர்கள் உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.9.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆய்வாளர் திரு. சாந்தராஜ், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. பன்னீர்செல்வம் மற்றும் தலைமைக் காவலர் திரு.சுகுமாரன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான ஆய்வாளர் திரு. சாந்தராஜ், தலைமைக் காவலர் திரு. சுகுமாரன் மற்றும் மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.பன்னீர் செல்வம் ஆகியோரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**